


ஆக-17, தமிழர் எழுச்சிநாள்

விடுதலைச் சிறுத்தைகளின்

# தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு

## தீர்மானங்கள்

17.08.2026, திங்கள்கிழமை ★ உளுந்தூர்பேட்டை



# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## முகப்புரை

இந்திய மக்களாகிய யாம்,

**இறையாண்மையுள்ள, சமதர்மமுள்ள, மதசார்பற்ற, சனநாயக குடியரசைக்** கொண்ட இந்தியாவைக் கட்டமைத்திடவும் ;

அதன் குடிமக்கள் யாவருக்கும்

சமூக - பொருளாதார - அரசியல் **நீதி** ;

சிந்தனை - வெளிப்பாடு - பற்றுறுதி - நம்பிக்கை
- வழிபாடு ஆகியவற்றின் **சுதந்திரம்** ;

தகுதிப்படுத்துதல் - வாய்ப்பளித்தல் மற்றும் அவற்றை
குடிமக்களிடையே மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான **சமத்துவம்** ;

தனிநபரின் மாண்பு, தேசத்தின் ஒற்றுமை மற்றும்
ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு உறுதியளிக்கும் **சகோதரத்துவம்** ;

யாவற்றையும் பாதுகாத்திடவும்; ஏகமனதாக தீர்மானித்துள்ளோம்.

இந்த அரசியல் நிர்ணய சபையில் 1949 நவம்பர் 26ஆம் நாளாகிய இன்று இவ்வரசமைப்பினை ஏற்று, சட்டமாக இயற்றி எமக்கு யாமே வழங்கிக் கொள்கிறோம்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி





விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ஆக–17, 2026 அன்று உளுந்தூர்ப்பேட்டையில் நடத்தப்பெற்ற ’தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்!

1. சாதி ஒழிப்பு, மதசார்பின்மை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளைத் தமிழ்த் தேசியத்தின் அடித்தளமாகக் கொண்டு செயல்படவும்; சாதியையும், சாதியத்தைப் பாதுகாக்கும் மதவாதத்தையும் எதிர்த்து, அனைவருக்கும் சம உரிமையும் சமூக நீதியும் உறுதிசெய்யும் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கவும் இம்மாநாடு உறுதியேற்கிறது.

2. இந்துத்துவ மதவழி தேசியத்துக்கு எதிராக , அனைத்து தேசிய இனங்களின் மொழி, பண்பாட்டு அடையாளங்களையும் உரிமைகளையும் மதிக்கும் மதசார்பற்ற மொழிவழி தேசியத்தைக் கட்டியெழுப்பவும்; தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய எழுச்சியையும், இந்தியாவின் அனைத்து தேசிய இனங்களிடையே நல்லிணக்கம், நட்புறவு, ஐக்கியம் ஆகியவற்றையும் வளர்த்தெடுக்கவும் இம்மாநாடு உறுதியேற்கிறது.

3. இந்தியாவின் அனைத்துத் தேசிய இனங்களுக்கும் தன்னுரிமை, தன்னாட்சி அதிகாரம், மொழி மற்றும் பண்பாட்டு உரிமைகளை உறுதிசெய்யும் வகையில், தேசிய இனங்களின் இறையாண்மையுடன் கூடிய ஒன்றியக் கூட்டாட்சியை உருவாக்க வேண்டும். மாநிலங்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் பறிக்கும் மையப்படுத்தும் போக்கைத் தடுத்து, அரசமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சிக் கோட்பாட்டை வலுப்படுத்த ஒன்றிய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

4. தமிழர்களின் மொழியுரிமை, இனவுரிமை, பண்பாட்டு உரிமை, பொருளாதார உரிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்நாட்டுக்கு உண்மையான மாநில சுயாட்சியை உறுதிசெய்ய வேண்டும். கல்வி, பொருளாதாரம், நிர்வாகம், கலை, இலக்கியம், பண்பாடு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மாநிலங்களின் அதிகாரத்தை விரிவுபடுத்தும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள ஒன்றிய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

5. ஒரே தேசம், ஒரே மதம், ஒரே கலாச்சாரம், ஒரே அரசு, ஒரே ஆட்சி, ஒரே கட்சி என்ற ஆதிக்க அரசியலை நிராகரித்து, மதசார்பற்ற, சமத்துவ, ஜனநாயக இந்தியாவைக் கட்டியெழுப்பவும்; பிறமொழி, பிறஇன மக்களைப் பகையாகக் கருதாமல், அனைத்துத் தேசிய இனங்களின் எழுச்சிக்கும் ஐக்கியத்திற்கும் துணைநின்று, கூட்டாட்சி ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் இம்மாநாடு உறுதியேற்கிறது.

6. உச்சநீதிமன்றத்துக்கும் உயர்நீதிமன்றங்களுக்குமான நீதிபதிகளை உச்சநீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைக்கிறது. அதில் எவரை ஒன்றிய அரசு ஏற்கிறதோ அவரை குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார். உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத்தில் மாநில அரசின் ஆலோசனை கேட்கப்படவேண்டும் என்ற நடைமுறை இருந்தாலும் அது கொலிஜியத்தால் எல்லா நேரங்களிலும் ஏற்கப்படுவதில்லை. மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையிலான வழக்குகளில் ஒன்றிய அரசின் மேலாதிக்கத்தைக் கவனத்தில்கொண்டே தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. நதிநீர்ப் பங்கீடு போன்ற மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சனைகளிலும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் மக்களுக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் இருப்பதிலை. எனவே, உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் முதலான நீதி நிர்வாக அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு வழங்கவேண்டும். அதற்கேற்ப அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 217, 222, 223, 224, 224 ஏ ஆகியவற்றில் திருத்தம் செய்யப்படவேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

## அரசமைப்புச் சட்டம்

7. தற்போது, சில அரசமைப்புச் சட்ட உறுப்புகளை நாடாளுமன்றத்தின் சாதாரணப் பெரும்பான்மை மூலம் திருத்த முடியும். இது மிகவும் எளிதான ஒரு நடைமுறையாகும். மாநிலங்களின் அதிகாரங்கள் மற்றும் கூட்டாட்சி சமநிலையைப் பாதிக்கும் அரசமைப்புச் சட்ட உறுப்புகளை இவ்வாறு எளிதில் திருத்தப்படுவதைத் தடுக்க, பின்வரும் விதிவிலக்குகளைத் தவிர, மற்ற அனைத்து அரசமைப்புச் சட்ட உறுப்புகளை அரசமைப்புச் சட்டப் பிரிவு 368இன் கீழ் மட்டுமே திருத்தப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

8. தற்போது, அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு ஒவ்வொரு அவையிலும் உள்ள மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையும், கலந்துகொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கும் தேவை. இந்த நடைமுறை ஆளும் கட்சிக்கு எளிதில் சாதகமாக அமைவதால், அதனை மேம்படுத்தி, ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத் திருத்தச் சட்ட முன்வடிவும் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத ஆதரவைப் பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் வகையில் விதி வகுக்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

9. தற்போது, மிகச் சில கூட்டாட்சி அதிகாரப் பொருண்மைகளுக்கு மட்டுமே மாநிலப் பின்னேற்பு தேவைப்படுகிறது. இந்தியாவின் மாநிலங்கள் இன்று ஜனநாயக அளவில் முதிர்ச்சியடைந்துள்ளதால், அனைத்து முக்கியமான அரசமைப்புத் திருத்தங்களுக்கும் மாநிலப் பின்னேற்பைப் பெற வேண்டும்.

10. மாநிலப் பின்னேற்பிற்குத் தற்போது பாதி மாநிலங்களின் ஒப்புதல் மட்டுமே தேவைப்படுகிறது. இது மக்கள்தொகை குறைந்த மாநிலங்களின் கூட்டணி பெரிய மாநிலங்களின் விருப்பத்தை மீறிச் செயல்பட வழிவகுக்கும். எனவே, 'இரட்டைப் பெரும்பான்மை' விதியை அறிமுகப்படுத்த வேண்டும்: அதாவது: அ). மூன்றில் இரண்டு மாநிலச் சட்டமன்றங்களின் பின்னேற்பு; ஆ) பின்னேற்பு அளிக்கும் இந்த மாநிலங்கள், இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவையாக இருக்க வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

11. தற்போது, அரசமைப்புத் திருத்தத்தைத் தொடங்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உள்ளது. முதிர்ந்த கூட்டாட்சி நாடுகளைப் போல, மாநிலங்களுக்கும் திருத்தத்தை முன்மொழியும் உரிமை வழங்கப்பட வேண்டும். எனவே, மூன்றில் இரண்டு பங்கு மாநிலச் சட்டமன்றங்கள் (மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை) ஒரு திருத்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டால், அதனை நாடாளுமன்றம் பரிசீலிக்கக் கடமைப்பட்டதாகும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

12. ஒரு குறிப்பிட்ட மாநிலம் அல்லது மாநிலங்களை மட்டுமே பாதிக்கும் அரசமைப்புத் திருத்தங்களுக்கு (எ.கா., எல்லை மாற்றம், பெயர் மாற்றம், சிறப்பு வகைமுறைகள்), நாடு தழுவிய பின்னேற்புக்குப் பதிலாக, பாதிக்கப்பட்ட அந்த மாநிலத்தின் சட்டமன்றத்தின் ஒப்புதல் மட்டுமே தேவைப்பட வேண்டும். இந்த ஒப்புதல் அந்த மாநிலச் சட்டப்பேரவையின் (மற்றும் சட்ட மேலவையின்) மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

13. ஜெர்மனி, பிரேசில் போன்ற நாடுகளைப் போல, இந்திய அரசமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைத் திருத்த முடியாதவையாக வகைப்படுத்த வேண்டும். கீழ்க்கண்ட கொள்கைகள் அரசமைப்பின் உச்ச வல்லமை, நாட்டின்

ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, மக்களாட்சி, குடியரசு, கூட்டாட்சி, மதச்சார்பின்மை, அதிகாரப் பிரிப்பு, சட்டத்தின் ஆட்சி, நீதித்துறையின் சுதந்திரம், நீதித்துறை மறுசீராய்வு மற்றும் சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் உள்ளிட்டவை எந்தவொரு திருத்தத்தாலும் மாற்றப்படவோ, குறைக்கப்படவோ, அழிக்கப்படவோ கூடாது என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

14. அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் அவசரகதியில் நிறைவேற்றப்படுவதைத் தடுக்க, குறைந்தபட்ச விவாதக் கால அளவு கட்டாயமாக்கப்பட வேண்டும். ஓர் அரசமைப்புச் சட்டத் திருத்த வரைவு அறிமுகப்படுத்தப்பட்ட அதே கூட்டத்தொடரில் இறுதி வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. அது அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் ஆண்டுக்குள், நடவடிக்கை எடுக்க வேண்டிய சட்டமன்றங்கள் முன்னதாகவே செயல்பட்டாலன்றி, குடியரசுத் தலைவர் ஏற்பிசைவு அளிக்கக் கூடாது என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

15. அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில் மக்களின் கருத்தைக் கேட்கும் வழிமுறை இல்லை. அரசமைப்பை உருவாக்கியவர்கள் பொதுமக்கள் கருத்தறிதலை முக்கியத்துவப்படுத்தினர். எனவே, ஒரு திருத்தச் சட்டவரைவின் வாசகம், நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் நிர்ணயித்த முறைப்படி, மூன்று மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குப் பொதுமக்களின் ஆலோசனைக்காக வெளியிடப்பட்டிருந்தாலன்றி, அந்தத் திருத்தம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படக் கூடாது என ஆக்கப்படவேண்டுமென்று இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

16. சில அரசமைப்பு ஏற்பாடுகள் (குறிப்பாக அவசரநிலை அதிகாரங்கள் போன்றவை) நிரந்தரக் குறைபாடுகளாக மாறுவதைத் தடுக்க, 'மீளாய்வுப் பிரிவுகள்' (**Sunset clauses**) அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இவற்றின் கீழ், ஒவ்வொரு 10 அல்லது 15 ஆண்டுகளுக்கும் கட்டாயமாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகளின் பட்டியல் உருவாக்கப்பட வேண்டும். அந்தக் காலத்திற்குள் சட்டம் மீண்டும் இயற்றப்படாவிட்டால், அது தானாகவே செயலிழந்துவிடும் என ஆக்கப்படவேண்டுமென இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

17. ஒன்றிய அரசு, போஜ்புரி, ராஜஸ்தானி, சத்தீஸ்கரி, மகதி போன்ற 53 மொழிகளை 'இந்தியின் பேச்சுவழக்குகள்' எனத் தவறாக வகைப்படுத்துவதை நிறுத்த வேண்டும். இந்தி பேசுபவர்களின் உண்மையான எண்ணிக்கையை மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சரிசெய்து வெளியிட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

18. இந்தியாவின் மொழி மரபைப் பாதுகாக்க, 10 லட்சத்திற்கும் அதிகமானோர் தாய்மொழியாகப் பேசும் அனைத்து மொழிகளையும் எட்டாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும். பாலி, பிராகிருதம், ஆங்கிலம் ஆகியவையும் சேர்க்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

19. மொழி அழிவைத் தடுக்க, மொழிச் சிறுபான்மையினருக்கான சிறப்பு அதிகாரிப் பதவிக்குப் பதிலாக, வலுவான 'தேசிய மொழிக்கழகம்' ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

20. 'ஒரு நாடு, ஒரு மொழி' என்ற மாயையை இந்திய ஒன்றிய அரசு கைவிட வேண்டும். ஒற்றுமை என்பது பன்மைத்துவம். மொழிச் சமத்துவத்திலிருந்தே வருகிறது, மொழித் திணிப்பிலிருந்து அல்ல என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

21. மும்மொழிக் கொள்கை என்பது தோல்வியுற்ற கொள்கை. அதற்குப் பதிலாக, ஆங்கிலம் மற்றும் வட்டார மொழி ஆகிய இருமொழிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, கூடுதல் மொழிகள் மாணவர்களின் தன்னார்வத் தேர்வாக இருக்க வேண்டும் என இம்மாநாடு அறிவிக்கிறது.

22. ஆங்கிலத்தை ஒன்றியத்தின் நிரந்தர ஆட்சி மொழியாக அரசமைப்புச் சட்டத்தில் நிலைநிறுத்த வேண்டும். அனைத்து எட்டாவது அட்டவணை மொழிகளையும் ஆட்சி மொழிகளாக அறிவிக்க வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

23. மாநில ஆட்சி மொழி குறித்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 345 இல் உள்ள 'அல்லது இந்தி' என்பதை நீக்கி, மாநிலங்கள் தங்கள் பகுதியில் பயன்பாட்டில்

உள்ள மொழிகளை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்கலாம் எனத் தெளிவுபடுத்த வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

24. ஒன்றிய–மாநில, மாநில–மாநில தொடர்புகளுக்கு ஆங்கிலத்தையே நிரந்தர இணைப்பு மொழியாக நிலைநிறுத்த வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

25. ஒரு மாழலத்தில் குறிப்பிட்ட அளவு மக்கள் பேசும் மொழி ஒன்றை மாநில அரசு அங்கீகரிக்க வேண்டும் என உத்தரவிடுவதற்குக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 347 ஐ நீக்க வேண்டும். இது காலப்பொருத்தமற்றது, மாநில சுயாட்சிக்கு எதிரானது என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

26. உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் ஆங்கிலத்தையே தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் மாநில மொழிகளைப் பயன்படுத்த மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

27. குடிமக்களின் மனுக்களுக்கு, அந்த மனு எழுதப்பட்ட மொழியிலோ, அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியிலோ, அல்லது ஆங்கிலத்திலோ பதிலளிக்க வேண்டும். இந்தியில் பதிலளிக்கக் கூடாது என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

28. இந்தியைப் பரப்புவதற்கு வகைசெய்யும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 344 (ஆட்சி மொழி ஆணையம் மற்றும் நாடாளுமன்றக் குழு) நீக்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

29. அரசமைப்புச் சட்டப் பிரிவு 351, இந்தியை மட்டும் வளர்ப்பதற்குப் பதிலாக, இந்தியாவின் அனைத்து மொழிகளையும் பாதுகாக்க, வளர்க்க, புத்துயிர் அளிக்க உதவும் வகையில் திருத்தப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

30. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் உறுப்பினர்கள் எந்தவொரு இந்திய மொழியிலும் பேச அனுமதிக்க வேண்டும். இதற்காக நேரடி மொழிபெயர்ப்பு வசதி கட்டாயமாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

31. தமிழ் வழியில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் தற்போது வழங்கப்பட்டுவரும் இடஒதுக்கீட்டின் அளவை 7.5% இல் இருந்து 10% ஆக உயர்த்தவேண்டும் என இம்மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது.

32. சிபிஎஸ் இ பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியைப் புகுத்தும் ஒன்றிய அரசின் ஆணையை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தக்கூடாது என இம்மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது.

33. ஒன்றிய அரசால் துவக்கப்படும் கேந்திரிய வித்யாலயா, ஜவஹர் நவோதயா வித்யாலயா, ஏகலவ்யா பள்ளிகள், சைனிக் பள்ளிகள் முதலான பள்ளிகளிலும் இருமொழிக் கொள்கையையே கடைபிடிக்கவேண்டும் என ஒன்றிய அரசைத் தமிழ்நாடு அரசு வலியுறுத்த வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

## கல்வி

34. ஒத்திசைவுப் பட்டியலின் 25–ஆவது இனத்தையும் மாநிலப் பட்டியலின் 11–ஆவது இனத்தையும் திருத்தி, தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட கல்வியைப் பொதுப்பட்டியலிலிருந்து மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்.

35. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை ஒன்றிய அரசு நேரடியாக மேலாண்மை செய்வதை நிறுத்தி, அவற்றை மாநிலங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

36. இந்தியாவின் முதல் 100 பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களை பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் இதர ஒழுங்குமுறை அமைப்புகளின் கண்காணிப்பிலிருந்து முற்றிலும் விடுவிக்க வேண்டும்; இது பத்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

37. ஒன்றியப் பட்டியலின் 66–ஆவது இனம் தொடர்பாக உச்சநீதிமன்றம் விரிவான பொருள்விளக்கம் அளித்ததால் ஏற்பட்ட மாநிலச் சட்டமன்ற அதிகாரத்தின் சிதைவைத் தடுக்க அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும்.

38. மாநிலங்களால் நிறுவப்பட்டு, நிதியளிக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை முழுவதுமாக மாநிலங்களிடமும் அவற்றின் பல்கலைக்கழகங்களிடமும் மட்டுமே இருக்க வேண்டும்; தரங்களைப் பேணுதல் என்ற போர்வையில் இந்த அதிகாரத்தை ஒன்றிய அரசு அபகரிக்கக் கூடாது என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

39. தேசிஞுத் தேர்வு முகமை கலைக்கப்பட வேண்டும்; நுழைவுத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பு 2018–க்கு முன் அவற்றை நிர்வகித்து வந்த முகமைகளிடமே மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

40. மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தர் எனும் சட்டப்பூர்வ பொறுப்பிலிருந்து ஆளுநர் விடுவிக்கப்பட வேண்டும்; மாநில அரசுகள் புகழ்பெற்ற, கட்சி சார்பற்ற ஒருவரை வேந்தராக நியமிக்க சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

## ஆளுநர்

41. ஆளுநர் பதவி முற்றிலும் அழிக்கப்பட வேண்டும். அது நீடிக்கும் வரையில் ஆளுநர் நியமனத்தில் மாநிலத்திற்குப் பங்கு வழங்க வேண்டும். மாநிலச் சட்டமன்றத்தின் பெரும்பான்மை ஒப்புதலுடன், அயல் மாநிலங்களைச் சேர்ந்த மூன்று புகழ்பெற்ற ஆளுமைகளின் பட்டியலிலிருந்து ஒருவரைக் குடியரசுத் தலைவர் தேர்வு செய்து ஆளுநராக நியமிக்கம்வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

42. ஆளுநருக்கு நிலையான, புதுப்பிக்க முடியாத ஐந்தாண்டுப் பதவிக்காலம் வழங்க வேண்டும். பதவிக்காலம் முடிந்ததும் அடுத்தவர் பதவியேற்கும் வரை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி பொறுப்பு வகிக்க வேண்டும். சட்டமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை தீர்மானத்தின் பேரில் மட்டுமே ஆளுநரை நீக்க முடியும் எனச் சட்டத் திருத்தம் செய்ய வேண்டும்.

43. ஆளுநர் அந்த மாநிலத்தைச் சாராதவராகவும், பொதுவாழ்வில் சிறந்து விளங்குபவராகவும், கடந்த ஐந்தாண்டுகளில் எந்த அரசியல் கட்சியிலும் பதவி வகித்திருக்கக் கூடாது எனும் தகுதிகளைச் சேர்க்க வேண்டும் என மாநாடு வலியுறுத்துகிறது.

44. ஆளுநரின் விருப்புரிமைகளைக் கட்டுப்படுத்தும் வகையில், ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணம் எனும் புதிய பதின்மூன்றாவது அட்டவணையை அரசமைப்பில் சேர்க்க வேண்டும்.

45. அரசாங்கம் அமைப்பதில் ஆளுநர் தெளிவான முன்னுரிமை வரிசையைப் பின்பற்ற வேண்டும். நம்பிக்கை வாக்கெடுப்பு முயற்சிகளைத் தாமதப்படுத்துதல் கூடாது என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

46. சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல் ஆகியவற்றில் ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரிலேயே செயல்பட வேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிலுவையில் இருக்கும்போது மட்டுமே ஆளுநர் தானாக முன்வந்து நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தலாம்.

47. ஆளுநர் மாநில அரசு அல்லது சட்டமன்றத்தைப் பொதுவெளியில் விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் முதலில் சட்டப் பேரவை கூட்டப்படும்போது ஆளுநர் உரையாற்றுவதற்கு வகை செய்யும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 176 நீக்கப்பட வேண்டும்.

48. சட்டவரைவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதில், தமிழ்நாடு வழக்கில் உச்சநீதிமன்றம் வகுத்த காலக்கெடுவைப் பின்பற்றி, மாநில சட்ட மசோதாக்களை ஆளுநரும் குடியரசுத் தலைவரும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிவு செய்ய வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவு செய்யாவிட்டால், மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

## சரக்கு மற்றும் சேவை வரி

49. 14ஆவது நிதிக் குழு ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 42 விழுக்காடும், 15ஆவது நிதிக் குழு 41 விழுக்காடும் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தபோதிலும், ஒன்றிய அரசு பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தி மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய வரிப் பகிர்வைக் குறைத்துள்ளது. 14ஆவது நிதிக் குழுவின் காலத்தில் மாநிலங்களுக்குச் சென்றடைந்த வரிப் பகிர்வு சுமார் 35 விழுக்காடாகவும், 15ஆவது நிதிக் குழுவின் காலத்தில் வெறும் 30 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது. மேலும், மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ள

வேண்டிய வரி வருவாயைத் தவிர்ப்பதற்காக செஸ், சர்சார்ஜ் உள்ளிட்ட கூடுதல் வரிகளை ஒன்றிய அரசு விதித்து வருகிறது. இதன் காரணமாக மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதி கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, பல்வேறு சமூக நலத் திட்டங்களுக்கும் கல்விக்கும் ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடு பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளதால் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 16ஆவது நிதிக் குழுவும் இந்தக் குறைகளைக் களையவில்லை. குறைவாக வரி செலுத்தும் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அதிக நிதியைப் பகிர்ந்தளிப்பதும், அதிக அளவில் வரி செலுத்தும் தமிழ்நாடு உள்ளிட்ட வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு ஒப்பீட்டளவில் குறைவான நிதியைப் பகிர்ந்தளிப்பதுமான தற்போதைய கணக்கீட்டு முறையும், வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு அநீதி இழைக்கும் தற்போதைய வரிப் பகிர்வு முறையும் கைவிடப்பட வேண்டும் என்று இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

50. அனைத்து மாநிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலும், மாநிலங்கள் செலுத்தும் வரிக்கும் அவற்றுக்குக் கிடைக்கும் நிதிப் பங்கிற்கும் நியாயமான தொடர்பு நிலைக்கும் வகையிலும் புதிய வரிப் பகிர்வு முறையை உருவாக்க வேண்டும். இதற்கான உரிய மாற்று முறையை தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசின் முன் வைக்க வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது. நிதிப் பகிர்வில் பாதிக்கப்படும் பிற மாநிலங்களும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட்டு, தங்களது உரிமைகளை வலியுறுத்தி, மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பகிர்வில் நீதியை நிலைநாட்ட முன்வர வேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. அரசமைப்புச் சட்டத்தின் 280ஆவது பிரிவின் (3)ஆம் உட்பிரிவு (a)–ன்படி, ஒன்றிய அரசின் வரி வருவாயை எந்த விகிதத்தில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது என்பதை நிதி ஆணையமே தீர்மானிக்கும் நடைமுறை தற்போது நடைமுறையில் உள்ளது. இந்த நடைமுறை மாநிலங்களின் நிதி உரிமையையும் நிதித் தன்னாட்சியையும் கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது. எனவே, இத்தகைய நடைமுறை கைவிடப்பட வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது. மாநிலங்கள் வரிகளை வசூலிப்பதற்கும், ஒன்றிய அரசு அவற்றை வசூலித்து செலவழிப்பதற்குமான தற்போதைய அதிகாரச் சமநிலையற்ற நிலை மாற்றப்பட வேண்டும். மாநிலங்களின் பொறுப்புகளுக்கும் அவற்றின் நிதித் தேவைகளுக்கும் ஏற்றவாறு, ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 75 விழுக்காடு மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதற்கேற்ற

வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு, மாநிலங்களின் நிதித் தன்னாட்சியையும் நிதி உரிமையையும் உறுதி செய்யும் புதிய நிதிப் பகிர்வு முறையை உருவாக்க வேண்டும் என்று இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

51. சரக்கு மற்றும் சேவை வரி அவையில் கூட்டாட்சி சமநிலையை மீட்டெடுக்க அரசமைப்புச் சட்டப்பிரிவு 279–இன் உட்பிரிவுகள் (7) மற்றும் (9)–இல் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். குறைவெண் வரம்பு மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்காக (33–இல் 22 பேர்) உயர்த்தப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

52. ஜி.எஸ்.டி. கவுன்சிலில் அதில் பங்கேற்றிருக்கும் மாநிலங்களின் பிரதிநிதிகள் வாக்களித்து வரி விழுக்காட்டைத் தீர்மானிப்பதாக உள்ளது. அவ்வாறு வாக்களிக்கும்போது பதிவான வாக்குகளில் பெரும்பான்மை ஆதரவு பெற்றால் அந்தத் தீர்மானம் நிறைவேறும் என்ற முறை இப்போது உள்ளது. அதனால் ஆளுங்கட்சி ஆட்சியில் உள்ள மாநிலங்கள் வாக்களித்தாலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட முடியும் என்ற நிலை உள்ளது. இதற்கு மாறாக பெரும்பான்மையைத் தீர்மானிக்க ‘பதிவான வாக்குகள்’ என்பதிலிருந்து ‘மொத்த உறுப்பினர்கள்’ என மாற்றப்பட வேண்டும். ஒன்றியத்தின் வாக்குப் பங்கு 33.33%லிருந்து 20% ஆகக் குறைக்கப்பட வேண்டும்; மாநிலங்களின் கூட்டு மதிப்பு 80% ஆக உயர்த்தப்பட வேண்டும்.

53. ‘ஒரு மாநிலம், ஒரு வாக்கு’ முறை நீக்கப்பட்டு, மக்கள் தொகை, கடந்த 3 ஆண்டுகளின் சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் அல்லது 50:50 கலவையின் அடிப்படையில் மாநிலங்களின் வாக்கு மதிப்பு ஒதுக்கப்பட வேண்டும்.

54. அரசமைப்புச் சட்டப்பிரிவு 279A(4)–ஐத் திருத்தி, சரக்கு மற்றும் சேவை வரி அவையின் முடிவுகள் ஆலோசனைக்குரியவை மட்டுமே என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

55. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி, ஒன்றிய சரக்கு மற்றும் சேவை வரி, ஒன்றிய ஆட்சிநிலப் பகுதி சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

56. சரக்கு மற்றும் சேவை வரி அவையின் தலைமைப் பொறுப்பை ஒன்றிய

மற்றும் மாநில நிதி அமைச்சர்களிடையே ஆண்டுதோறும் சுழற்சி முறையில் அளிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டப்பிரிவு 279(2)-ஐத் திருத்த வேண்டுமென இம்மாநாடு வலியுறுக்துகிறது.

57. ஒன்றிய நிதியமைச்சகத்திலிருந்து நிர்வாகரீதியாகத் தன்னாட்சி பெற்ற, ஒரு சுதந்திரமான சரக்கு மற்றும் சேவை வரி அவைச் செயலகத்தை ஏற்படுத்த வேண்டும்; ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிலிருந்து சம அளவில் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

58. உலகளவில் பயன்படுத்தப்படும் **HSN** வகைப்பாட்டின் அடிப்படையில் 'ஒரு பொருளுக்கு ஒரு வரிவீதம்' என்ற கட்டாயக் கொள்கையை செயல்படுத்த வேண்டும்.

59. அனைத்து வரிவீத மாற்றங்களும் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே அறிவிக்கப்பட வேண்டும்; அது ஏப்ரல் 01 முதல் நடைமுறைக்கு வர வேண்டும்.

60. மாநிலங்கள் சரக்கு மற்றும் சேவை வரி அவைக்குத் தகவல் தெரிவித்து, மாநில சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களை 2% வரம்பிற்குள் மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

61. பணமில்லாப் பொருளாதாரத்தை உருவாக்கும் நோக்கில் ஒன்றிய அரசால் ஊக்குவிக்கப்பட்ட **UPI** பரிவர்த்தனைகளுக்கு **MDR** கட்டணம் விதிக்கும் நடவடிக்கையை இம்மாநாடு கண்டிக்கிறது. ஷீஊணுா பரிவர்த்தனைகளுக்கு எந்தவித **GST** அல்லது பிற வரிவிதிப்பையும் மேற்கொள்ளாமல், அதன் கட்டணமில்லா நடைமுறையைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என ஒன்றிய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

62. **UPI** மீதான கட்டணம் வணிகர்கள், வங்கிகள், நிதித் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் மீது கூடுதல் சுமையை ஏற்படுத்துவதோடு, டிஜிட்டல் நிதிச் சேர்க்கையையும் பாதிக்கும். எனவே, **UPI** பரிவர்த்தனைகளுக்கு **GST** உள்ளிட்ட எந்தவித வரிவிதிப்பையும் விதிக்கும் முயற்சியைக் கைவிட்டு, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் கொள்கையை ஒன்றிய அரசு தொடர வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

63. ஜி.எஸ்.டி வரிவிதிப்பு தொடர்பாக நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கூட்டு நிலைக்குழுவை உருவாக்குவதற்கு அரசமைப்புச் சட்டப்பிரிவு 279–இல் புதிய உட்பிரிவு (12)–ஐச் சேர்க்க வேண்டும்.

64. ஒரு சுதந்திரமான, சட்டப்பூர்வமான சரக்கு மற்றும் சேவை வரி பிணக்குத் தீர்வு ஆணையத்தை உருவாக்கும் வகையில் அரசமைப்புச் சட்டப்பிரிவு 279**A(II)**–ஐத் திருத்த வேண்டும்; ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தீர்ப்பாயமாக இது அமைய வேண்டும்.

65. கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் முழுமையாகச் செயல்படுத்தப்படும் வரை, மாநிலங்கள் பெட்ரோலியப் பொருட்களை சரக்கு மற்றும் சேவை வரியின்கீழ் கொண்டுவருவதை ஒத்திவைக்க வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

## தேர்தல்

66. ஒன்றிய மற்றும் மாநிலத் தேர்தல் நிர்வாகங்களைப் பிரிக்க வேண்டும்; மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களை மாநிலத் தேர்தல் ஆணையங்களே நடத்துவதற்கு ஏதுவாகச் சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

67. ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ முன்மொழிவு (129–வது அரசமைப்புத் திருத்தம், 2024) அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை மீறுவதால், அது திரும்பப் பெறப்பட வேண்டும்.

68. கட்சி தாவலுக்கான தடைக் காலத்தை 6 ஆண்டுகளாக உயர்த்த வேண்டும். பெருமளவிலான நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி விலகினாலும் அதைக் கட்சித் தாவலாகவே கருத வேண்டும்; பேரவைத் தலைவருக்குப் பதிலாகத் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை உயர்நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

69. தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் நியமனம், பணிநிபந்தனைகள் மற்றும் பதவிக்காலம் தொடர்பான 2023ஆம்

ஆண்டுச் சட்டம், தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தையும் நடுநிலைத்தன்மையையும் பாதிக்கும் வகையில் ஒன்றிய அரசுக்கு மேலாதிக்கம் வழங்குகிறது. பிரதமர் தலைமையிலான நியமனக் குழுவில் பிரதமரால் நியமிக்கப்படும் ஒன்றிய அமைச்சரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் இடம்பெறும் தற்போதைய அமைப்பு உண்மையான அதிகாரச் சமநிலையை உறுதி செய்யவில்லை.

70. எனவே, தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம், நம்பகத்தன்மை மற்றும் அரசியல் சார்பின்மை ஆகியவற்றை உறுதி செய்யத் தவறியுள்ள 2023ஆம் ஆண்டுத் தேர்தல் ஆணையர் நியமனச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது. தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்யும் வகையில், தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுக்கும் குழு அரசியல் சார்பற்ற, பரந்த பிரதிநிதித்துவம் கொண்ட அமைப்பாக மாற்றப்பட வேண்டும். பிரதமர், ஒன்றிய அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன், உச்சநீதிமன்ற நீதிபதி அல்லது முன்னாள் நீதிபதி போன்ற அரசியல் சார்பற்ற நபர் ஒருவரும் இடம்பெறும் வகையில் தேர்வுக் குழு விரிவுபடுத்தப்பட வேண்டும். தகுதியான ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் பெயர்களைத் தேர்வுக் குழு பரிசீலித்து, பரிசீலனையில் உள்ள பெயர்களை வெளிப்படையாகப் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வர வேண்டும். மேலும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் முறையையும் பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு தேர்தல் ஆணையர் நியமனத்தை வெளிப்படையான, ஜனநாயகமான மற்றும் அரசியல் சார்பற்ற நடைமுறையாக மாற்ற வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

## கனிம வளங்கள்

71. மாநிலங்களின் வரிவிதிப்பு அதிகாரங்களைப் பறிக்கும் வகையில், சுரங்கம் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957–இல் புதிய பிரிவு 9ம்–ஐச் சேர்த்து, கனிம உரிமைகள் மீது மாநில அரசுகள் வரி, செஸ் அல்லது பிற கட்டணங்களை விதிக்கக் கூடாது எனக் கட்டுப்படுத்தும் ஒன்றிய அரசின் சட்டத் திருத்தத்தை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

72. கனிம உரிமைகள் மீது வரி விதிக்கும் மாநிலங்களின் அதிகாரம் அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையின் மாநிலப் பட்டியல் 50ஆம் பதிவில் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் அந்த அதிகாரத்தை நடைமுறையில் இல்லாததாக்குவது கூட்டாட்சித் தத்துவத்தின் மீதான நேரடித் தாக்குதலாகும். எனவே, மாநிலங்களின் நிதி மற்றும் சட்டமன்ற அதிகாரங்களைப் பறிக்கும் இச்சட்டத் திருத்தத்தை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

73. தமிழ்நாட்டில் சுண்ணாம்புக்கல் உள்ளிட்ட கனிமங்களின் மீது மாநில அரசு விதித்துள்ள வரிகள் மற்றும் கட்டணங்கள், மாநிலத்தின் வளர்ச்சிக்கும் பொதுநலத் திட்டங்களுக்கும் தேவையான முக்கியமான வருவாய் ஆதாரங்களாகும். குறிப்பாக, சுண்ணாம்புக்கல்லுக்கு டன்னுக்கு ₹160, லிக்னைட்டுக்கு டன்னுக்கு ₹250 என விதிக்கப்பட்டுள்ள வரிகள் உள்ளிட்ட மாநிலத்தின் கனிம வருவாய் ஆதாரங்களைப் பறிப்பது, தமிழ்நாட்டின் நிதிநிலையை மேலும் பாதிக்கும் என இம்மாநாடு சுட்டிக் காட்டுகிறது.

74. கனிம வளங்கள் மாநிலங்களின் நிலப்பரப்பில் இருந்து எடுக்கப்படுகின்றன; அவற்றால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு, உள்கட்டமைப்பு அழுத்தம் மற்றும் சமூகச் செலவுகளை மாநிலங்களே எதிர்கொள்கின்றன. எனவே, தமிழ்நாட்டின் இயற்கை வளங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கை உறுதி செய்வதும், மாநிலத்தின் கனிம உரிமைகள் மீதான வரிவிதிப்பு அதிகாரத்தைப் பாதுகாப்பதும் அவசியம் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

75. கனிம உரிமைகள் மீது மாநிலங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் உள்ளது என 2024ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு தெளிவாகத் தீர்ப்பளித்துள்ளது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் மாநிலங்கள் ஏற்கெனவே சட்டங்களை இயற்றி வரிகளை வசூலிக்கத் தொடங்கியுள்ள நிலையில், கடந்த காலத்தில் வசூலிக்கப்பட வேண்டிய வருவாயை மாநிலங்களுக்கு மீட்டளிக்க வேண்டிய பொறுப்பிலிருந்து ஒன்றிய அரசு தன்னை விலக்கிக் கொள்ள முயல்வது ஏற்றுக்கொள்ள முடியாதது என இம்மாநாடு ஒன்றிய அரசுக்கு சுட்டிக்காட்டுகிறது.

76. உச்சநீதிமன்றத் தீர்ப்பால் உறுதி செய்யப்பட்ட மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்; மாநிலங்களுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய நிலுவை வருவாயை முழுமையாகப் பெறுவதற்கு வழிவகுக்க வேண்டும்; ஏற்கெனவே மாநிலங்கள் சட்டப்படி விதித்துள்ள கனிம வரிகள் மற்றும் செஸ்களைச் செல்லாததாக்கும் எந்த நடவடிக்கையையும் கைவிட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது. மாநிலங்களின் நிதிச் சுயாட்சி, அரசமைப்பின் கூட்டாட்சித் தன்மை மற்றும் மாநிலங்களின் இயற்கை வளங்களின் மீதான உரிமை ஆகியவை எந்த நிலையிலும் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காகத் தமிழ்நாடு அரசு சட்ட ரீதியாகவும் மக்களைத் திரட்டியும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

## கூட்டுறவு நிறுவனங்கள்

77. தேசிணுக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகச் சட்டம், 1962–ஐத் திருத்தித் தற்போது ஒன்றிய அரசு தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகச் (திருத்த) சட்டம், 2026 ஐக் கொண்டுவந்துள்ளது. இதன் மூலம், மாநில அரசுகளின் வழியாகச் செயல்பட்டு வந்த கூட்டுறவு வளர்ச்சிக்கான நிதியுதவி முறையை மாற்றி, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு மாநிலங்களுக்குள் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், கூட்டுறவு வளர்ச்சியில் ஈடுபடும் பிற நிறுவனங்களுக்கும் நேரடியாகக் கடன் மற்றும் மானியம் வழங்கும் அதிகாரம் அளிப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

78. கூட்டுறவு நிறுவனங்கள் மாநிலங்களின் சட்டங்கள் மற்றும் நிர்வாக அமைப்புகளின் கீழ் செயல்பட்டு வருகின்ற நிலையில், ஒன்றிய அரசு நேரடியாக அவற்றின் நிதி மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளில் தலையிடுவது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானதாகும். எனவே, மாநிலங்களின் அதிகாரத்தைக் குறைக்கும் இத்தகைய சட்டத் திருத்தங்களை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

79. தமிழ்நாட்டில் வேளாண்மை, பால் உற்பத்தி, மீன்வளம், கைத்தறி, சிறு தொழில், நுகர்வோர் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கூட்டுறவு நிறுவனங்கள் மாநில அரசின் கொள்கைகள் மற்றும் சட்டங்களின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய மாநில அளவிலான

கூட்டுறவு நிறுவனங்களின் பங்குமுதலில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நேரடியாகப் பங்கேற்கும் வகையில் சட்டம் திருத்தப்படுவது, அவற்றின் செயல்பாடுகளில் ஒன்றிய அரசுக்கு நேரடிக் கட்டுப்பாட்டை உருவாக்கும் அபாயம் கொண்டது. எனவே, தமிழ்நாட்டிற்குள் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகம், பங்குமுதல், நிதி மற்றும் கொள்கை முடிவுகளில் தமிழ்நாடு அரசின் அதிகாரம் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

80. தற்போதைய சட்டத்தின் கீழ், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்காக மாநில அரசுகளுக்கு நிதி வழங்குவது தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் முக்கியப் பணிகளில் ஒன்றாக உள்ளது. இதன் மூலம் மாநில அரசுகள் தங்களது தேவைகளுக்கும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் ஏற்ப கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியைச் செலுத்துகின்றன. இந்த நடைமுறையைப் பலவீனப்படுத்தி, ஒன்றிய அரசு நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் நிறுவனங்களுக்கு நிதி, கடன், மானியம் மற்றும் பங்குமுதல் வழங்கும் முறையை விரிவுபடுத்துவது மாநிலங்களின் நிதி மற்றும் நிர்வாகத் தன்னாட்சியைப் பாதிக்கும். எனவே, தமிழ்நாட்டுக்கான கூட்டுறவு வளர்ச்சி நிதி மாநில அரசின் வழியாகவும், மாநிலத்தின் முன்னுரிமைகளின் அடிப்படையிலும் வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

81. சட்டத் திருத்தத்தின் மூலம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு கூட்டுறவு நிறுவனங்களின் கடன் மற்றும் பிற தகவல்களைச் சேகரித்து, ஒன்றிய அரசு, இந்திய ரிசர்வ் வங்கி, வங்கிகள் மற்றும் ஒன்றிய அரசால் அறிவிக்கப்படும் பிற நிதி நிறுவனங்களுடன் பகிர்ந்துகொள்ளும் அதிகாரம் வழங்கப்படுகிறது. மாநிலங்களின் கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் அவற்றின் வணிக மற்றும் நிதிச் செயல்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புடையவை என்பதால், அவற்றை மாநில அரசின் ஒப்புதலின்றி ஒன்றிய அளவில் சேகரித்துப் பகிர்வது ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, தமிழ்நாட்டின் கூட்டுறவு நிறுவனங்களின் தகவல் பாதுகாப்பும், அவற்றின் மீதான மாநில அரசின் சட்டப்பூர்வக் கட்டுப்பாடும் உறுதி செய்யப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

82. கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை நோக்கம் உள்ளூர் மக்களின் பொருளாதாரப் பங்கேற்பையும் சுயநிர்வாகத்தையும் வலுப்படுத்துவதாகும்.

ஆனால், ஒன்றிய அரசு நிதி, பங்குமுதல், தகவல் சேகரிப்பு மற்றும் நேரடி நிதியுதவி ஆகியவற்றின் மூலம் மாநிலங்களுக்குள் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களின் மீது தனது அதிகாரத்தை விரிவுபடுத்துவது கூட்டுறவின் ஜனநாயகத் தன்மையையும் மாநிலங்களின் உரிமைகளையும் பாதிக்கும். எனவே, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் அதிகார விரிவாக்கம் குறித்து அனைத்து மாநில அரசுகளுடனும் விரிவான ஆலோசனை நடத்தப்பட வேண்டும்; மாநிலங்களின் ஒப்புதல் மற்றும் பங்கேற்பு இல்லாமல் மாநில அளவிலான கூட்டுறவு நிறுவனங்களை நேரடியாகக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது; தமிழ்நாட்டின் கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகம், நிதி மற்றும் கொள்கைத் தீர்மானங்களில் தமிழ்நாடு அரசின் முதன்மை அதிகாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

## அணுமின்சக்தி

83. ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள **SHANTI** சட்டம், அணுமின் நிலையங்கள், அணு எரிபொருள் மற்றும் அவை தொடர்புடைய செயல்பாடுகளில் தனியார் நிறுவனங்களுக்கு விரிவான வாய்ப்புகளை வழங்குகிறது. இதன் மூலம் மாநிலங்களின் நிலம், நீர், சுற்றுச்சூழல் மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பான அதிகாரங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அணுசக்தி ஒன்றியப் பட்டியலில் இருந்தாலும், மாநிலங்களின் அரசமைப்புச் சட்ட உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். எனவே, தமிழ்நாட்டில் எந்த அணுசக்தித் திட்டமும் மாநில அரசின் ஒப்புதலுடன் மட்டுமே செயல்படுத்தப்பட வேண்டும். அதேபோல் உள்ளாட்சி அமைப்புகளின் ஒப்புதலும் சட்டரீதியாக கட்டாயமாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

84. அணுமின் நிலைய விபத்துகள் மனித உயிர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்குத் தலைமுறைகள் கடந்த பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடியவை. ஆனால் **SHANTI** சட்டம் இயக்குநர்களின் பொறுப்பை மட்டுப்படுத்தி, உற்பத்தியாளர் பொறுப்பையும் குறைக்கிறது. இதனால் உண்மையான இழப்பீட்டுச் சுமை பொதுமக்கள் மற்றும் அரசின் மீது விழும் அபாயம் உள்ளது. போபால், செர்னோபில், ஃபுகுஷிமா போன்ற அனுபவங்கள் இதன் ஆபத்தைத் தெளிவாக காட்டுகின்றன. எனவே, உச்சவரம்பில்லாத முழுமையான பொறுப்பு மற்றும் மாசுபடுத்துபவரே செலுத்த வேண்டும் என்ற கொள்கை கட்டாயமாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

85. அணுமின் நிலையங்களுக்காக நிலம், நீர் மற்றும் கடலோர வளங்கள் பயன்படுத்தப்படுவது பல சமூகங்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடும். குறிப்பாக விவசாயிகள், மீனவர்கள், பழங்குடியினர் மற்றும் தலித் சமூகங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். கதிரியக்கக் கழிவுகளின் நீண்டகாலப் பாதுகாப்பு மற்றும் அகற்றல் குறித்துச் சட்டத்தில் போதுமான உறுதிகள் இல்லை. மேலும், அணுமின் நிலையங்களை மூடுவதற்கான நிதி மற்றும் எதிர்காலத் தலைமுறை பாதுகாப்பு தெளிவாக வரையறுக்கப்படவில்லை. எனவே, சுயேச்சையான சுற்றுச்சூழல் மதிப்பீடு, மக்களின் முன்கூட்டிய ஒப்புதல் மற்றும் முழுமையான மறுவாழ்வு கட்டாயமாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

86. அணுசக்தித் துறையில் தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் சேரும் நிலையில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு மிக முக்கியமானதாகிறது. ஆனால் ஒழுங்குமுறை அமைப்பின் மீது ஒன்றிய அரசின் கட்டுப்பாடு தொடர்வது கூட்டாட்சித் தத்துவத்திற்கு முரணாகும். மேலும் விபத்து நேரத்தில் மாநிலம், ஒன்றியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புகள் தெளிவாக இல்லை. இதனால் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை குறைகிறது. எனவே, அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் தற்சார்புடன் செயல்பட வேண்டும் மற்றும் தகவல்கள் பொதுமக்களுக்கு வெளிப்படையாக வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

87. அணுசக்தி விரிவாக்கம் வெறும் மின்சார உற்பத்தி அல்லது முதலீட்டு வாய்ப்பாக மட்டும் பார்க்கப்படக் கூடாது. அது மக்கள் பாதுகாப்பு, சுற்றுச்சூழல், நீதி மற்றும் மாநில உரிமைகள் ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புடையது. அணுமின் திட்டங்களின் ஆபத்துகள் மற்றும் செலவுகள் பொதுமக்கள் மீது சுமத்தப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. மாநில ஒப்புதல் இல்லாமல் எந்தத் திட்டமும் திணிக்கப்படக் கூடாது. மேலும், அனைத்துச் செலவுகளும் திட்ட நிறுவனங்களே ஏற்கும் வகையில் சட்டப் பாதுகாப்பு உருவாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

## காவிரி நதி நீர்

88. காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு, உச்சநீதிமன்றத் தீர்ப்பு மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீரைக் கர்நாடக அரசு முறையாக வழங்காமல் இருப்பது, தமிழ்நாட்டின் சட்டப்பூர்வமான நீர்ப்பங்கையும் கூட்டாட்சித் தத்துவத்தையும் நேரடியாகப் பாதிக்கும் செயல் என இம்மாநாடு கண்டிக்கிறது. காவிரி ஒரு மாநிலத்தின் தனிச்சொத்து அல்ல; இரு மாநிலங்களின் மக்களுக்கும் உரிமையுள்ள பன்னாட்டு நதியைப் போன்ற பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய நீர்வளம் ஆகும். எனவே, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகள் கட்டாயமாகவும் காலவரையறையுடனும் செயல்படுத்தப்படுவதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும், தமிழ்நாட்டிற்குரிய நீரைத் தடுக்கும் எந்த நடவடிக்கையையும் அனுமதிக்கக் கூடாது என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

89. 2026–27 நீர்ப்பாசன ஆண்டில் ஜூன் 1 முதல் ஆகஸ்ட் 12 வரையிலான காலத்திற்குத் தமிழ்நாட்டின் பில்லிகுண்டுலு எல்லைப்புள்ளியில் வந்து சேர வேண்டிய நீரில் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், கர்நாடகத்தின் அணைகளில் போதுமான நீர் இருப்பு இருந்தும் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவின்படி நீரைத் திறந்துவிடாதது தமிழ்நாட்டின் விவசாய உரிமையைப் பறிக்கும் செயலாகும். காவிரி நீரை நம்பியுள்ள டெல்டா உள்ளிட்ட பகுதிகளில் குறுவை, சம்பா உள்ளிட்ட பயிர்கள் பாதிக்கப்படுவதுடன், விவசாயிகளின் வருமானம், கால்நடை வளர்ப்பு மற்றும் கிராமப்புறப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும். எனவே, தமிழ்நாட்டிற்குரிய நிலுவை நீரையும் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திரப் பங்கையும் உடனடியாக வழங்க கர்நாடக அரசுக்கு உரிய உத்தரவைப் பிறப்பிக்கவும், அதை கர்நாடக அரசு உறுதியாகச் செயல்படுத்தவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

90. காவிரி நீர் குறைவதால் தமிழ்நாட்டின் வேளாண்மை மட்டுமின்றி குடிநீர் ஆதாரங்களும் நிலத்தடி நீர்வளமும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. போதிய ஆற்றுநீர் கடலைச் சென்றடையாததால் காவிரி டெல்டாவின் இயற்கையான நீரியல் சமநிலை பாதிக்கப்படுவதுடன், கடல்நீர் உட்புகுதல் அதிகரித்து நிலத்தடி நீரில் உவர்ப்பு ஏற்படும் அபாயமும் உள்ளது. ஆற்றின் இயற்கையான ஓட்டம் குறைவது ஈரநிலங்கள், நீர்வாழ் உயிரினங்கள், மீன்வளம் மற்றும் காவிரி சார்ந்த உயிரியல் அமைப்புகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, நீரை வெறும்

பாசனத் தேவைக்கான வளமாக மட்டும் கருதாமல், சுற்றுச்சூழல் ஓட்டத்தையும் நதியின் இயற்கையான உயிரியல் தொடர்ச்சியையும் பாதுகாக்கும் வகையில் காவிரி நீர் மேலாண்மை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

91. காவிரி தொடர்பான அனைத்து முடிவுகளும் அறிவியல் தரவுகள், மழைப்பொழிவு, நீர்வரத்து, அணைகளின் இருப்பு, பாசனத் தேவைகள் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வெளிப்படையாக எடுக்கப்பட வேண்டும் என்றும், இரு மாநிலங்களுக்கும் சமமான கண்காணிப்பு மற்றும் தரவுப் பகிர்வு முறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது. காவிரி நீரை நம்பியுள்ள தமிழ்நாட்டு விவசாயிகள், மீனவர்கள் மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு மாநில உரிமையின் பிரிக்க முடியாத பகுதியாகக் கருதப்பட வேண்டும். மேலும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகளை மீறும் எந்த மாநிலத்திற்கும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தமிழ்நாட்டின் நீருரிமையைப் பாதுகாக்க மாநில அரசு அனைத்து அரசமைப்புச் சட்ட மற்றும் சட்டரீதியான வழிமுறைகளையும் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

## சுகாதாரம்

92. ஒன்றிய நிதி ஆதரவுத் திட்டங்களுக்கான செலவுகளில் குறைந்தபட்சம் 80%ஐ ஒன்றிய அரசு ஏற்க வேண்டும்; மற்ற அனைத்து உதவிகளுக்கும் நிர்வாகக் கட்டுப்பாடற்ற தொகுப்பு மானியங்கள் வழங்கப்பட வேண்டும்.

93. ஒன்றிய அரசு முன்னெடுக்கும் சுகாதாரத் திட்டங்களின் பட்டியலை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும்; அதிலிருந்து மாநிலங்கள் தங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

94. மருத்துவக் கல்வியை 1976-க்கு முந்தைய நிலைக்கு மீட்டு, மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டும்; ஒன்றிய அரசின் பங்கு குறைந்தபட்சத் தரநிலைகள் மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சிக்கு நிதி வழங்குவதில் மட்டும் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

95. தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019–ஐத் திருத்தி: (அ) அனைத்து மாநிலங்களுக்கும் நிரந்தரப் பிரதிநிதித்துவம் வழங்குதல்; (ஆ) மருத்துவ ஆலோசனைக் குழுவுக்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வழங்குதல்; (இ) நான்கு தன்னாட்சி வாரியங்களின் வட்டாரக் கிளைகளை ஏற்படுத்தி ஒழுங்குமுறைகளைப் பரவலாக்குதல் ஆகியவை சேர்க்கப்படவேண்டும்.

96. தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019–ஐத் திருத்தி அதன் பிரிவு 14ஐ நீக்கி அனைத்து நிலைகளிலும் (இளநிலை, முதுநிலை, உயர்சிறப்பு) நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும்; மாணவர் சேர்க்கை உரிமையை மாநிலங்களுக்கு மீட்டளிக்க வேண்டும்.

97. ஒன்றிய சுகாதார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் 28 மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களில் 23,000–க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக இருப்பது கவலைக்குரியது. குறிப்பாக, 18 எய்ம்ஸ் மருத்துவ நிறுவனங்களில் சுமார் 34 விழுக்காடு ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதனால் மருத்துவச் சேவையும் மருத்துவக் கல்வியும் பாதிக்கப்படுவதால், அனைத்து காலிப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்பி, மக்கள் நல மருத்துவச் சேவையை மேம்படுத்த வேண்டும் என ஒன்றிய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

98. நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அகில இந்திய ஒதுக்கீட்டு முறையை **(AIQ)** ஒழிக்க வேண்டும். மாநில அரசுகளால் அமைக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளின் அனைத்து இடங்களையும் மாநில அரசுகளே நிரப்பிக் கொள்ள உரிமைத் தர வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

## தமிழீழம்

99. இலங்கை அரசு புதிதாக வரையறுக்கவுள்ள அரசியலமைப்புச் சட்டம், கடந்த 77 ஆண்டுகளாகத் தமிழர்கள் எதிர்கொண்டுவரும் இனப் பாகுபாடு, அரசியல் உரிமை மறுப்பு, நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மற்றும் தமிழர்களின் பாரம்பரிய அடையாளச் சிதைப்பு ஆகியவற்றை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் அமையும் என்கிற அச்சம் ஈழத் தமிழர்களிடையே மேலோங்கியுள்ளது.

குறிப்பாக, முழுமையான 'ஒற்றை ஆட்சி' முறையைத் திணித்து தமிழ்மக்களின் வாழ்வுரிமைகளை முற்றாகச் சிதைக்கும் நோக்கில் அச்சட்டம் வடிவமைக்கப்பட

இருப்பதாகவும் தெரியவருகிறது. இந்நிலையில், தமிழ்மக்களின் சனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அச்சட்டம் அமைந்திட வேண்டுமென இம்மாநாடு இலங்கை அரசை வலியுறுத்துகிறது.

இனச் சிக்கலுக்குத் 'தனித் தமிழ் ஈழம்' ஒன்றே தீர்வு என்பது தான் விடுதலைச் சிறுத்தைகளின் நிலைப்பாடு ஆகும். எனினும், உலகெங்கும் வாழும் ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களின் கருத்தறியும் வகையில் 'பொதுவாக்கெடுப்பை' நடத்த வேண்டும் என இலங்கை அரசுக்கும் இந்திய அரசு உள்ளிட்ட அனைத்துலக சமூகத்திற்கும் இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

100. ஈழத் தமிழர்களின் நிலங்கள் மற்றும் பாரம்பரிய வாழ்விடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது அபகரிக்கப்பட்ட நிலங்கள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்; திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், இராணுவமயமாக்கல் மற்றும் தமிழர்களின் மக்கள் தொகைச் சமநிலையை மாற்றும் நடவடிக்கைகள. உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது. போர் முடிந்து 16 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தொடரும் மனித உரிமை மீறல்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நீதி மறுப்பு ஆகியவற்றுக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

101. ஈழத் தமிழர்களின் அரசியல், மொழி, நிலம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்திய ஒன்றிய அரசு தனது வரலாற்றுப் பொறுப்பையும் பிராந்திய அமைதி தொடர்பான கடமையையும் உணர்ந்து, இலங்கை அரசுடன் உயர்மட்டத் தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

102. அதிகாரப் பகிர்வு மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசை இந்திய ஒன்றிய அரசு வலியுறுத்த வேண்டும். ஈழத் தமிழர்களின் நியாயமான அரசியல் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் சுயமரியாதையை உறுதிசெய்யும் நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்படும் வரை இந்தியா தனது முயற்சிகளைத் தொடர வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

103. தமிழ்நாட்டில் பல்வேறு அகதிகள் முகாம்களில் பல ஆண்டுகளாக வசித்து வரும் ஈழத் தமிழ் அகதிகளின் குடியிருப்புகள் பெரும்பாலான இடங்களில்

பழுதடைந்தும், மழை மற்றும் வெயிலைத் தாங்க முடியாத நிலையிலும் உள்ளன. பல குடும்பங்கள் போதிய இடவசதியின்றியும் பாதுகாப்பற்ற சூழலிலும் வாழ்ந்து வருகின்றனர். எனவே, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து ஈழத் தமிழ் அகதிகள் முகாம்களையும் அரசு முழுமையாக ஆய்வு செய்து, சேதமடைந்த குடியிருப்புகளைப் புதுப்பிப்பதுடன், தேவையான இடங்களில் புதிய, தரமான, பாதுகாப்பான வீடுகளைக் கட்டித் தர வேண்டும் எனவும் இம்மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனிப்பட்ட குடியிருப்பு மற்றும் அதனுடன் இணைந்த கழிப்பறை வசதி உறுதி செய்யப்பட வேண்டும்.

104. ஈழத் தமிழ் அகதிகள் முகாம்களில் பல இடங்களில் குடிநீர் வசதி போதுமானதாக இல்லை. பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், செயல்படாத ஆழ்துளைக் கிணறுகள் உள்ளிட்ட பிரச்சினைகளால் மக்கள் குடிநீரை விலைக்கு வாங்க வேண்டிய நிலை உள்ளது. அதேபோல், பொதுக் கழிப்பறைகள் பராமரிப்பின்றிப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. குறிப்பாக, பெண்களும் குழந்தைகளும் இதனால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அனைத்து முகாம்களிலும் பாதுகாக்கப்பட்ட, தடையற்ற குடிநீர் வழங்கல், வீடுதோறும் கழிப்பறை, கழிவுநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை, சாலை, தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும். பழுதடைந்த குடிநீர் கட்டமைப்புகள் உடனடியாகப் புதுப்பிக்கப்பட்டு, குடிநீர் வேறு பகுதிகளுக்குத் திருப்பிவிடப்படுவதைத் தடுத்து, முகாம் மக்களுக்கான குடிநீர் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

105. தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த ஈழத் தமிழ் அகதி குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குத் தரமான கல்வி கிடைப்பது அவர்களின் எதிர்காலத்திற்கான அடிப்படை உரிமையாகும். பொருளாதாரத் தடைகள் காரணமாக அவர்களின் உயர்கல்வி தடைபடக் கூடாது. எனவே, ஈழத் தமிழ் அகதி மாணவர்களுக்குப் பள்ளிக் கல்வி முதல் கல்லூரி மற்றும் முதுநிலைப் படிப்பு வரை இலவசக் கல்வி, கல்வி உதவித்தொகை, விடுதி வசதி, புத்தகங்கள், மடிக்கணினி உள்ளிட்ட தேவையான கல்வி ஆதரவுகள் வழங்கப்பட வேண்டும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களுடன், தேவையான இடங்களில் தனியார் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளிலும் உயர்கல்வி பெறுவதற்கான கட்டணச் சலுகை மற்றும் முழுமையான கல்வி உதவிகள் வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது.

106. தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வசித்து வரும் ஈழத் தமிழ் அகதி இளைஞர்களில் பட்டதாரிகளும், முதுநிலைப் பட்டதாரிகளும், பல்வேறு தொழில்நுட்பத் தகுதிகளைப் பெற்றவர்களும் உள்ளனர். ஆனால், அவர்களின் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்புகள் கிடைக்காததால் பலர் பொருளாதார நெருக்கடியில் உள்ளனர். எனவே, தகுதி மற்றும் திறன் அடிப்படையில் ஈழத் தமிழ் அகதிகளுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் உரிய வாய்ப்புகளை வழங்குவதற்கான சட்டரீதியான மற்றும் நிர்வாகரீதியான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும். மேலும், அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அரசின் பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களில் அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

107. ஈழத் தமிழ் அகதிகளின் இளைஞர்களுக்கு அவர்களின் கல்வி, தொழில்நுட்பத் திறன் மற்றும் அனுபவத்திற்கேற்ப தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு கிடைப்பதை அரசு ஊக்குவிக்க வேண்டும். மேலும், முகாம்களில் வசிக்கும் பெண்கள் உள்ளிட்டோர் அமைத்துள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழில் பயிற்சி, சந்தைப்படுத்தல் உதவி மற்றும் குறைந்த வட்டியில் கடன் வழங்கி, அவர்கள் சுயதொழில் தொடங்கி பொருளாதாரத் தற்சார்பு அடைவதற்கான சிறப்புத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்த வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

108. தமிழ்நாட்டில் அகதிகளாக வசித்து வரும் பல குடும்பங்கள் பதிவு பெறுவதற்காக விண்ணப்பித்து நீண்ட காலமாகக் காத்திருக்கின்றன. பதிவு இல்லாததால் அரசின் நிவாரண உதவிகள் மற்றும் பல்வேறு நலத்திட்டங்களைப் பெற முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு முழுவதும் பதிவு பெறாமல் உள்ள ஈழத் தமிழ் அகதிகளைக் கணக்கெடுத்து, அவர்களின் விண்ணப்பங்களை விரைந்து பரிசீலித்து, தகுதியுடைய அனைவருக்கும் உடனடியாகப் பதிவு வழங்க வேண்டும். ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் மீண்டும் சிக்கலான நடைமுறைகளை ஏற்படுத்தாமல், பதிவு மற்றும் ஆவணச் செயல்முறைகளை எளிமைப்படுத்த வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது. மேலும்,

முகாம்களுக்கு வெளியே பதிவு செய்து வசிக்கும் ஈழத் தமிழ் அகதிகளுக்கும் முகாம்களில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் சமத்துவ அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

109. பல ஆண்டுகளாக முகாம்களில் வசித்து வரும் ஈழத் தமிழ் அகதிகளின் சுகாதாரத் தேவைகள் சிறப்புக் கவனத்துடன் அணுகப்பட வேண்டும். குறிப்பாக பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சுகாதார சேவைகள் முகாம்களுக்கு அருகிலேயே கிடைக்க வேண்டும்.எனவே, தேவையான அனைத்து முகாம்களிலும் துணை சுகாதார நிலையங்கள் அல்லது நிரந்தர மருத்துவச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தேவையான மருத்துவப் பணியாளர்கள் மூலம் தொடர் மருத்துவச் சேவை வழங்கப்பட வேண்டும். தடுப்பூசி, தொற்றுநோய்த் தடுப்பு, சுகாதார விழிப்புணர்வு மற்றும் அவசர மருத்துவ உதவிகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும். தொற்றுநோய் அல்லது பொது சுகாதார அவசரநிலை ஏற்படும் காலங்களில் முகாம் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், முகக்கவசங்கள் மற்றும் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

110. இணையவழிக் கல்வி உள்ளிட்ட நவீன கல்வி முறைகளைப் பயன்படுத்த வேண்டிய சூழலில், பல அகதி முகாம்களில் இணைய வசதி, கணினி, திறன்பேசி மற்றும் பிற டிஜிட்டல் வசதிகள் போதுமான அளவில் இல்லை. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. எனவே, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஈழத் தமிழ் அகதி முகாம்களில் இலவச இணைய வசதி, டிஜிட்டல் கற்றல் மையங்கள், கணினி வசதிகள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். முகாம்களில் உள்ள மாணவர்களின் கல்வி இடைநிற்றலைத் தடுக்க சிறப்புக் கல்வித் திட்டமும், உயர்கல்வி மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி மையங்களும் அமைக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

111. பல அகதி முகாம்களில் குடியிருப்புகளுக்கு மிக அருகிலேயே இடுகாடுகள் அமைந்துள்ளதால், மக்கள் குறிப்பாக, குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்பற்ற மற்றும் சுகாதாரமற்ற சூழலில் வாழ வேண்டிய நிலை உள்ளது. எனவே, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஈழத் தமிழ் அகதி முகாம்களில்

குடியிருப்புகளுக்குப் போதிய இடைவெளியுடன், மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் மரியாதையை உறுதி செய்யும் வகையில் தனித்த இடுகாடுகள் அல்லது தகனம் செய்வதற்கான உரிய இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். முகாம்களின் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார நிலைமைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

112. இயற்கைப் பேரிடர்கள், விபத்துகள், தொற்றுநோய்கள் உள்ளிட்ட அவசரநிலைகளில் பாதிக்கப்படும் ஈழத் தமிழ் அகதிகளுக்கும் தமிழ்நாட்டின் பிற மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் இழப்பீடுகள் பாரபட்சமின்றி வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் தொகைகள் தகுதியுடைய அகதிக் குடும்பங்களுக்குத் தாமதமின்றிச் சென்றடைவதைத் தமிழ்நாடு அரசு உறுதி செய்ய வேண்டும். உயிரிழப்பு உள்ளிட்ட துயரச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி நிதியுதவி, சமூகப் பாதுகாப்பு மற்றும் தேவையான மறுவாழ்வு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

113. பல தசாப்தங்களாகத் தமிழ்நாட்டில் வசித்து வரும் ஈழத் தமிழ் அகதிகள் இனி வெறும் நிவாரணம் பெற வேண்டியவர்களாக மட்டுமே கருதப்படாமல், அவர்களுள் விருப்பமுள்ளவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படவேண்டும். அதற்கேற்ப குடியுரிமைத் திருத்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள ஈழத் தமிழ் அகதிகளின் சமூக, பொருளாதார நிலை குறித்து விரிவான கணக்கெடுப்பு நடத்தி, அவர்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட ஈழத் தமிழ் அகதிகள் நலன் மற்றும் மறுவாழ்வுக்கான ஒருங்கிணைந்த மாநிலக் கொள்கை ஒன்றை தமிழ்நாடு அரசு உருவாக்க வேண்டும். முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியிலும் வசிக்கும் அனைத்து ஈழத் தமிழ் அகதிகளுக்கும் சமமான நலத்திட்ட அணுகலை உறுதி செய்து, அவர்களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என இம்மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது.

## தொகுதி மறு சீரமைப்பு

114. அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் எண்ணிக்கை நூற்றாண்டுக்கும் மேலாக 435 ஆக மாற்றமின்றி தொடர்வதை இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது. எனவே, இந்தியாவிலும் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை தற்போதைய அளவிலேயே தொடர வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், ஏற்கெனவே குறைவாக உள்ள விவாத வாய்ப்புகள் மேலும் குறைந்து, பிரதிநிதித்துவ ஜனநாயகம் பாதிக்கப்படும். மாநிலங்களுக்கிடையிலான தொகுதிப் பங்கீடு மீதான 1971 மக்கள்தொகை அடிப்படையிலான தடையை 2126 வரை அல்லது அனைத்து மாநிலங்களின் வீய்யூ தேசிய சராசரியின் நூ10%க்குள் வரும் வரை நீட்டித்து, அதுவரை மக்களவைத் தொகுதிகள் 550 ஆகவும், மாநிலங்களுக்கிடையிலான பங்கீடு 1971 நிலையிலும் தொடர வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

115. நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவைத் தொகுதிகள் மறுவரையறை குறித்து அரசியல் நிர்ணய சபையில் விவாதித்து முடிவு செய்தபோது, உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டம் எதுவும் இல்லை என்பதை இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது. தற்போது, அடித்தள நிலையில் மக்களின் ஜனநாயகத் தேவைகளை நிறைவேற்றுவதில் உள்ளாட்சி அமைப்புகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. எனவே, புதிய சட்டங்களை இயற்றுவது, சட்டங்கள் மற்றும் திட்டங்களை உருவாக்குவது, அவற்றை ஆய்வு செய்வது ஆகிய சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தின் முதன்மைப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது. அவ்வாறு செய்யாத காரணத்தால் பஞ்சாயத்துத் தலைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் மக்களுக்கு வேறுபாடு தெரியாத நிலை தற்போது உருவாகியுள்ளது என்பதையும் இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது. மேலும், சட்டப்பேரவைத் தொகுதிகள் மறுவரையறை மேற்கொள்ளப்படும்போது, அதை மக்கள்தொகையின் அடிப்படையில் மட்டுமல்லாமல், ஒரு மாநிலத்தில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கணக்கிட வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

116. கடந்த முறை தொகுதி மறுவரையறையின்போது, முஸ்லிம்களின் வாக்குகளின் மதிப்பைக் குறைக்கும் வகையில் தொகுதிகள்

வரையறுக்கப்பட்டதாகப் புகார்கள் எழுந்ததையும், பட்டியலின மக்களிடமிருந்தும் இதுபோன்ற புகார்கள் எழுந்ததையும் இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது. எனவே, சட்டப்பேரவைத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்படும்போது, முஸ்லிம்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினரின் வாக்குகளுக்கு உரிய அரசியல் மதிப்பும் பிரதிநிதித்துவமும் கிடைக்கும் வகையில் தொகுதி எல்லைகளை வரையறுப்பதில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது. இதே கொள்கை பட்டியலின மக்களுக்கான தனித் தொகுதிகளை வரையறுப்பதற்கும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

117. தொகுதி மறுவரையறையின்போதுதான் தனித் தொகுதிகள் சுழற்சி முறையில் மாற்றப்படுவதால், ஒரு தொகுதி நீண்டகாலமாகத் தனித் தொகுதியாகவே இருக்கும் நிலை உருவாகிறது என்பதை இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது. ஒப்பீட்டளவில் தனித் தொகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதில் ஆட்சியாளர்களும் மாவட்ட நிர்வாகமும் போதிய அக்கறை காட்டுவதில்லை. மேலும், தற்போதுள்ள கட்சி அரசியல் சூழல் தனித் தொகுதி உறுப்பினர்கள் சுயமாகச் செயல்படுவதற்கும் போதிய வாய்ப்பை வழங்கவில்லை. இதன் விளைவாகப் பெரும்பாலான தனித் தொகுதிகள் ஒப்பீட்டளவில் வளர்ச்சியில் பின்னடைந்த நிலையில் உள்ளன. அதுமட்டுமின்றி, தனித் தொகுதிகளில் உள்ள எஸ்சி அல்லாத மக்கள் தங்களுக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லாத நிலையால் எஸ்சி மக்கள்மீது கோபமடையும் நிலையும் காணப்படுகிறது. எனவே, ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை சென்சஸ் கணக்கெடுப்பு முடிந்த பின்னர், அதன் அடிப்படையில் தனித் தொகுதிகளைச் சுழற்சி முறையில் மாற்றியமைக்க வேண்டும் என்று இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

118. ஐம்பது ஆண்டுகளாக நீடித்து வரும் தொகுதி மறுவரையறை முடக்கத்தின் விளைவாக எஸ்சி, எஸ்டி மக்களுக்கான தனித் தொகுதிகள் போதுமான அளவில் உயர்த்தப்படவில்லை என்பதை இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது. நமக்குக் கிடைக்கும் கணிப்புகளின்படி, ஒவ்வொரு சென்சஸின்போதும் தொகுதி மறுவரையறை செய்யப்படாததால் எஸ்சி மக்களுக்கு 52 மக்களவை இடங்களும், எஸ்டி மக்களுக்கு 24 இடங்களும் பறிபோயுள்ளன. மொத்தத்தில், அரசமைப்புச் சட்டம் பாதுகாக்க விரும்பிய எஸ்சி, எஸ்டி சமூகங்களுக்கு 76 நாடாளுமன்ற இடங்கள் காணாமல் போயுள்ளன இதன் விளைவாக சுமார் 9.5

கோடி மக்களின் அரசியல் குரல் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளின் மக்கள்தொகையைவிட அதிகமானதாகும். எனவே, நீண்டகாலமாக முடக்கி வைக்கப்பட்டுள்ள தொகுதி மறுவரையறையை மறுபரிசீலனை செய்து, எஸ்சி, எஸ்டி மக்களின் மக்கள்தொகைக்கேற்ப அவர்களுக்கான தனித் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும் என்று இம்மாநாடு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

119. தொகுதி மறுவரையறையில் மக்களவையுடன் மாநிலங்களவையின் பிரதிநிதித்துவமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது. மாநிலங்களவையின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையில், பண மசோதாக்கள் அல்லாதவற்றையும் பண மசோதாக்களாக வகைப்படுத்தி நிறைவேற்றும் நடைமுறைகள் மாநில உரிமைகளைப் பாதிக்கின்றன. எனவே, மக்களவைக்கு இணையான முக்கியத்துவம் மாநிலங்களவைக்கும் வழங்கப்பட வேண்டும். அமெரிக்காவைப் போல, மாநிலங்களின் அளவு அல்லது மக்கள்தொகையைப் பொருட்படுத்தாமல் அனைத்து மாநிலங்களுக்கும் சம எண்ணிக்கையிலான மாநிலங்களவை இடங்கள் வழங்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அரசியல் நிர்ணய சபையில் லோக்நாத் மிஸ்ரா முன்வைத்த இதற்கான முன்மொழிவை தற்போதைய சூழலில் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

120. மாநிலங்களுக்கு இடையிலான தொகுதி எண்ணிக்கை மாற்றமின்றி இருக்கும் அதே வேளையில், நகரமயமாக்கல் மற்றும் உள்நாட்டு இடப்பெயர்ச்சியைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு 25 ஆண்டுகளுக்கும் மாநிலங்களுக்குள்ளான தொகுதி எல்லைகளைச் சரிசெய்வதற்கான நடைமுறைகள் தொடர வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

121. ஒன்றிய தொகுதி மறுசீரமைப்பு ஆணையத்தின் அதிகாரம் மக்களவைத் தொகுதிகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட வேண்டும். மாநில ஆணையங்களே சட்டமன்றத் தொகுதிகளை நிர்ணயிக்கும் முழு அதிகாரத்தையும் கொண்டிருக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

122. இரு ஆணையங்களின் அமைப்பிலும் நீதித்துறை, தேர்தல் ஆணையம் மற்றும் பல்கட்சி அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவை இடம்பெற வேண்டும்.

உறுப்பினர்களின் நியமனம் குழு அடிப்படையில், வெளிப்படையான முறையில் நிகழ வேண்டும். இதற்கு ஏற்ப, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170, 327 மற்றும் ஏழாவது அட்டவணையில் உள்ள தொடர்புடைய இனங்கள் (ஒன்றியப் பட்டியல் – இனம் 72, மாநிலப் பட்டியல் – இனம் 37) ஆகியவை திருத்தப்பட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

123. தொகுதி மறுசீரமைப்பு ஆணையத்துக்குக் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படும் 12 உறுப்பினர்கள் முறை நீக்கப்பட வேண்டும். மாநிலங்களவை முற்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அவையாக மாற்றப்பட வேண்டும். இதனைச் செயல்படுத்த, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 80(1)(ஞ), 80(2), 80(3) மற்றும் நான்காவது அட்டவணை ஆகியவை திருத்தப்பட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

124. 2003–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்ட ‘வசிப்பிடத் தகுதி’ **(Domicile Requirement)** மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். ஒரு உறுப்பினர், தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

125. பழங்குடியினருக்கு (ST) ஒதுக்கப்பட்ட தொகுதிகள், அவர்களின் நிலப்பரப்புத் தொடர்ச்சி மற்றும் ஐந்தாவது, ஆறாவது அட்டவணைகளின் கீழ் உள்ள சிறப்புப் பாதுகாப்புகளைக் கருத்தில் கொண்டு, சுழற்சி முறையிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும். இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 330 மற்றும் 332 ஆகியவை திருத்தப்பட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## முகப்புரை

இந்திய மக்களாகிய யாம்,

**இறையாண்மையுள்ள, சமதர்மமுள்ள, மதசார்பற்ற, சனநாயக குடியரசைக்** கொண்ட இந்தியாவைக் கட்டமைத்திடவும் ;

அதன் குடிமக்கள் யாவருக்கும்

சமூக - பொருளாதார - அரசியல் **நீதி** ;

சிந்தனை - வெளிப்பாடு - பற்றுறுதி - நம்பிக்கை
- வழிபாடு ஆகியவற்றின் **சுதந்திரம்** ;

தகுதிப்படுத்துதல் - வாய்ப்பளித்தல் மற்றும் அவற்றை
குடிமக்களிடையே மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான **சமத்துவம்** ;

தனிநபரின் மாண்பு, தேசத்தின் ஒற்றுமை மற்றும்
ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு உறுதியளிக்கும் **சகோதரத்துவம்** ;

யாவற்றையும் பாதுகாத்திடவும்; ஏகமனதாக தீர்மானித்துள்ளோம்.

இந்த அரசியல் நிர்ணய சபையில் 1949 நவம்பர் 26ஆம் நாளாகிய இன்று இவ்வரசமைப்பினை ஏற்று, சட்டமாக இயற்றி எமக்கு யாமே வழங்கிக் கொள்கிறோம்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

“

‘ஒரே தேசம் – ஒரே மதம் – ஒரே கலாச்சாரம் – ஒரே அரசு – ஒரே ஆட்சி–ஒரே கட்சி‘ என்கிற சங்கப் பரிவாரங்களின் பெரும் தீங்கான அரசியல் நிலைப்பாட்டை முறியடித்து, தேசிய இனங்களின் ஐக்கியத்தைக் கட்டியமைக்கவும்; இந்திய அளவில் மதசார்பற்ற தேசியத்தைக் கட்டமைக்கவும்; தமிழினத்தின் தன்னாட்சி அதிகாரத்தை வென்றெடுக்கவும் உறுதியேற்போம்.

தமிழினத்துக்கு மட்டுமின்றி இந்தியாவின் பிற தேசிய இனங்களுக்கும் ஐக்கியத்துக்கான அறைகூவல் விடுப்போம்!

”

**மதசார்பில்லா தமிழ்த் தேசியம் மலரட்டும்!–இந்திய தேசிய இனங்களின் ஐக்கியம் முகிழட்டும்!**

எழுச்சித்தமிழர்–முனைவர்

**– தொல்.திருமாவளவன்**

**விடுதலைச் சிறுத்தைகள் கட்சி**

தாமியா 9841798221